முச்சந்தி முரளி



"உதுக்கும் இனி எந்தத் தீபாவளிக்கு தீர்வெண்டு சொல லப்போயினமெண்டு தெரியேலையே"

Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 64

திங்கட்கிழமை
29 ஜனவரி 2024

தை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## இலங்கைக் கிரிக்கெட் மீதான தடை நீக்கம்

கொழும்பு, ஜன. 29
இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை தீர்மானித்துள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை 11



# குழப்பங்களுக்குத் தீர்வு: அதன் பின்னரே மாநாடு

## சிறீதரன், சுமந்திரனிடம் மாவை. திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜனவரி 29

**இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் தற்போது எழுந்துள்ள குழப்பங்களுக்குத் தீர்வைக்கண்ட பின்னரே கட்சியின் மாநாடுக்கான திகதியைத் தீர்மானிக்க முடியும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை.சேனாதிராசா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.** 11

## வீட்டுச் சின்னத்தை விட்டுக்கொடுக்கவேண்டும்

### சித்தார்த்தன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 29
கூட்டமைப்பாக, கட்சிகள் ஒன்றிணைந்து ஒரே அமைப்பாக இயங்கவேண்டுமாயின் ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியாக மாறவேண்டும். கட்சிகளுக்கிடையில் 11

## மாநாடு மட்டுமே ஒத்திவைப்பாம்

### புதுவியாக்கியானம் கொடுக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

மட்டக்களப்பு, ஜன. 29
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலர் குகதாசனே. கட்சியின் மாநாடு மட்டுமே பிற்போடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட நிர்வாகமே சட்ட ரீதியாக இயங்கும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். 11

## ஆபத்தான படகுப் பயணம் 3பேர் கடற்படையால் மீட்பு

### மயிலிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 29
மயிலிட்டியில் ஆபத்தான முறையில் படகைச் செலுத்திய இரண்டு சிறுவர்கள் உட்பட மூவரை காங்கேசன்துறை கடற்படையினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.
இது தொடர்பில் தெரியவருவதாவது:- 11



## கடலுக்குச் சென்ற இளைஞரைக் காணோம்

யாழ்., ஜன. 29
குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீன் பிடி நடவடிக் 11

## நுணிப்புல் மேய்ந்துவிட்டு அறிக்கை விட்ட டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன. 29
கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சர்வதேச நீதிமன்றத்துக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் வித்தியாசம் தெரியாது அறிக்கையை வெளியிட்டுள்ளார்.
அவரது கடற்றொழில் அமைச்சின் ஊடகப் பிரிவால் நேற்றையதினம் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.
அதில், இறுதிப்போரின்போது இடம்பெற்ற உயிரிழப்புகளுக்கான நீதி மற்றும் காணாமற்போனோருக் 11

## மன்னார் விபத்தில் குடும்பத்தலைவர் சாவு!

மன்னார், ஜன. 29
டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 11

## மாத்தளன் கடலில் குளித்த குடும்பத்தலைவர் மாயம்

முல்லைத்தீவு, ஜன. 29
மாத்தளன் கடலில் குளிக்கச் சென்ற இளம் குடும்பத் தலைவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமற்போயுள்ளார். புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசதுரை கஸ்தூரன் (வயது - 33) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.
ஆண்கள், பெண்கள் என 15 பேர் நேற்று மாலை வாகனத்தில் வந்து மாத்தளன் கடலில் குளித்துள்ளனர். கரையிலிருந்த மீனவர்கள், அந்தப் பகுதியில் குளிக்கவேண்டாம் என்று கூறியுள்ளனர். அதையும் பொருட்படுத்தாமல் குளித்துக்கொண்டிருந்த நிலையில், அங்கிருந்த ஆண் ஒருவர் சற்றுத் தள்ளிச் சென்று குளித்துக்கொண்டி ருக்கும்போது காணாமற்போயுள்ளார். அவரது குடும்பத்தவர்கள் கதறி அழுததுடன் கடலில் தேடியுள்ளனர்.
இதேவேளை மீனவர்களின் உதவியை அவர்கள் நாடிய போதும், கடலில் படகு இறக்க முடியாத நிலைமை காணப்பட்டதால் மீனவர்களாலும் மீட்க முடியவில்லை. (அ-ஒ-19)

### நாகப்பட்டினம் - காங்கேசன்

## பயணிகள் படகுச்சேவை எதிர்வரும் 15இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 29
தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான பயணிகள் படகுச் சேவை மீளவும் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. 11

## கஞ்சாவுடன் இளைஞர்கள் மானிப்பாயில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 29
மானிப்பாயில் இரண்டு இளைஞர்களை உயிர்கொல்லி கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் கடந்த 24ஆம் திகதி முதல் 'கார்னிவெல்' இடம்பெற்று வருகின்றது. 11

## கைக்குழந்தையுடன் ஏமாற்றித் திருட்டு

### அக்காவும் தம்பியும் கைது

யாழ்ப்பாணம், ஜன. 29
மக்கள் நடமாடும் பகுதிகளில் கைக்குழந்தையுடன் ஏமாற்றித் திருடி வந்த குற்றச்சாட்டில் அக்காவும் தம்பியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இரண்டு நாள்களுக்கு முன்னர், திருநெல்வேலி சந்தையில் ஜேர்மனியிலிருந்து வந்த பெண்மணியின் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலிலிருந்து விலக 30 வீத எம்.பி.க்கள் முடிவு!

## செலவுகளை ஈடுகட்ட முடியாமையே காரணமாம்

**கொழும்பு, ஜன. 29**

**பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளால் அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்குத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களில் சுமார் 30 வீதமானோர் தீர்மானித்துள்ளனர் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

விருப்புவாக்கு முறைமை காரணமாக பெருமளவான பணம் செலவு செய்தே அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகின்றனர் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை வைத்தே அந்தச் செலவை அவர்கள் ஈடுசெய்துவந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

தற்போது தீர்வையற்ற வாகன அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், தேர்தலுக்காகப் பணம் தேடுவது நெருக்கடியாக உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால் தாம் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தின் பெறுமதி 2 கோடி ரூபாவுக்கும் அதிகம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பண ஒதுக்கீட்டை நிதியமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களால் அதிருப்தியடைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பெரமுனவின் உறுப்பினர்கள் எனக் கூறப்படுகின்றது. (ம-44)

## குளவி கொட்டியதால் 3பேர் மருத்துவமனையில்

*கிளிநொச்சி, ஜன. 29*


*செல்வா நகருக்கும் சேவியர் கடைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று நண்பகல் கலைந்து வந்த குளவிக் கூட்டம் வீதியால் சென்ற பலரை கொட்டியுள்ளது. குளவிக்கொட்டுக்கு இலக்கான மூவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-113)*

## கிராம அலுவலர்கள் பெறுபேறு பட்டியல்

கொழும்பு, ஜன. 29

கிராம அலுவலர் பதவிக்கான பரீட்சையில் தகுதிபெற்ற 4 ஆயிரத்து 232 பேரின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moha.gov.lk இல் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு, அவர்கள் அரச சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## மனைவி கொலை: கணவருக்குத் தூக்குத்தண்டனை

கொழும்பு, ஜன. 29

மனைவியைத் தாக்கி தீயிட்டுக் கொலைசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கணவருக்குக் குளியாப்பிட்டி மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த நபருக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டது. (ச-இ)

## தொழுநோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 29



இலங்கையில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்று தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளதாவது:

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை உலக தொழுநோய் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இலங்கையில் தொழுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன் , தொழுநோய் குறித்த அச்சம் அதிகளவான மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. சிறுவர்களிடையே பரவும் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (ச-இ)

## காலபோக நெல் அறுவடை தென்மராட்சியில் ஆரம்பம்

தென்மராட்சி, ஜன.29

தென்மராட்சி பிரதேசத்தில் தைப்பூசத்தையடுத்து காலபோக நெற்செய்கை அறுவடை கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்ய கடந்த வருடத்தை விட பரப்புக்கு 100 ரூபா அதிகரித்துக் காணப்பட்டது. ஏற்கனவே பல்வேறு பாதிப்புக்குள்ளாகி பயிர்களில் போதிய விளைச்சல் இன்மையால் அதிகரித்து கட்டணம் கோருவது குறித்து நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். இது தொடர்பாக அறுவடை இயந்திர உரிமையாளர்களுடன் கேட்டபோது, கடந்த வருடத்தை விட இம்முறை எரிபொருள் விலை அதிகரித்துள்ளது என்றும் பல வயல்களில் நீர் காணப்படுவதால் இயந்திரங்கள் நீரில் இறங்கி செயற்படும்போது பாதிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் உள்ளதென்றும், இதனால் கடந்த வருடத்தைவிட பரப்புக்கு 100 ரூபா அதிகரித்துள்ளோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (ப-9)

## திறைசேரி உண்டியல்கள் ஏலவிற்பனை

கொழும்பு, ஜன.29

ஒரு லட்சத்து 60 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 31ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 70 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியிலான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக்காலத்தைக் கொண்ட 50 மில்லியன் ரூபா பெறுமதியானதிறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ-இ)

## கைது 803



கொழும்பு, ஜன.29

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் நள்ளிரவுவரையான கடந்த 24 மணி நேரத்தில் 803 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 562 சந்தேக நபர்களும் ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய 241 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## பாதி எரிக்கப்பட்ட சடலம் மீளவும் மருத்துவமனைக்கு!

கொழும்பு, ஜன. 29

தகனம் செய்யப்பட்டுக் கொண்டிருந்த சடலமொன்று மீள வெளியே எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. 81 வயதுடைய பெண்ணொருவர் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிவித்து, உடலைத் தகனம் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

இந்தநிலையில் குறித்த பெண் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக சந்தேகிப்பதாக பெண்ணின் உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸ் குழுவொன்று தகன அறைக்கு விரைந்து சடலத்தை மீளப்பெற்று மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மீரிகம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுக்தியவை எதிர்ப்போருக்கு போதைப்பொருள் பின்னணி

## அமைச்சர் அலஸ் கண்டுபிடிப்பு

**கொழும்பு, ஜன. 29**

**குடு வியாபாரிகளின் பணத்தில் வாழும் சிலரே யுக்திய நடவடிக்கையை எதிர்க்கின்றனர். எனினும், முன்வைத்த காலை நாம் பின்வைக்க தயாரில்லை - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவை முன்வைத்தபோதும் சமூகவலைத்தளங்களில் உள்ள சிலர் எம்மை விமர்சித்தனர். யுக்திய நடவடிக்கையையும் விமர்சித்துவருகின்றனர். குடுகாரர்களின் பணத்தில் வாழ்பவர்கள்தான் இவ்வாறு செயற்படுகின்றனர். என்னையும், பொலிஸ்மா அதிபரையும் பலகோணங்களில் விமர்சித்துவருகின்றனர். எப்படிதான் விமர்சித்தாலும் நிர்ணயித்த இலக்கை அடையாமல் நாம் பின்வாங்கப்போவதில்லை.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டும் நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். எம்மிடம் இல்லாத தகவல்கள் கத்தோலிக்க ஆயர் பேரவையிடம், அருட்தந்தையர்களிடம் இருந்தால் எமக்கு வழங்கி விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கலாம். பேராயர் உள்ளிட்ட ஆயர்மாரிடம் இந்தக் கோரிக்கையை விடுக்கின்றோம்.' - என்றார். (ம-44)

## பாலியல் வன்கொடுமை; மூதாட்டி உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 29

மயங்கி வீழ்ந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டியொருவர் உயிரிழந்துள்ளார். அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்தச்சம்பவம்காலி கரந்தெனிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார். இவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வாடகைக்கு வீடுகள் ; அவதானம் தேவை

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.29

வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது, அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் அதிக விலைகொடுத்து வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளனர்.

யுக்திய போதைப்பொருள் விசேட சோதனை நடவடிக்கையின் போது இந்தவிடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அவதானம் தேவை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ச-இ)



## 500 கோடி ரூபா 'பிரமிட்' மோசடி

### தம்பதியர் கைது

'பிரமிட்' திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபா மோசடி செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் தம்பதியர் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ச-இ)

## ஐவர் சுட்டுக்கொலை; மேலுமொருவர் கைது

கொழும்பு, ஜன. 29

பெலியத்த பிரதேசத்தில் 5 பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்தார் என்று சந்தேகிக்கப்படும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

*அடகு மோசடியில் ஈடுபட்டவர்*

## பிக்குவாக வேடமிட்டு பொலிஸுக்கு 'டிமிக்கி'

வங்கிகளில் போலி தங்கத்தை அடகு வைத்து மோசடியில் ஈடுபட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய - 19 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட ஒருவர் பிக்கு வேடத்தில் வாழ்ந்து வந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை கைதுசெய்ய புலனாய்வுக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டபோதிலும், 2008 ஆம் ஆண்டு முதல் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

மேல் நீதிமன்றத்தின் 12 பிடியாணைகள், நீதிவான் நீதிமன்றங்களில் 7 பிடியாணைகள் மற்றும் நிலுவையில் உள்ள 4 வழக்குகள் தொடர்பில் சந்தேகநபர் நீதிமன்ற குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

இந்தநிலையில் அவிசாவளையிலுள்ள பிரபலதியான நிலையம் ஒன்றில் பிக்குவாக வேடமிட்டு வசித்து வருகிறார் எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். (ச-இ)




## தினம் தெரியுமோ?

**த**லை இருக்க வாலாட வெளிக்கிட்டால், தலைக்குத்தான் சிக்கல். இப்ப அப்பிடிச் சில வாலுகளாலதான் தமிழரசுக் கட்சியின்ர மாநாடும் குழம்பினதெண்டு எல்லாருக்கும் நல்லாவே தெரியும். ஆனால் இந்தக் குழப்பம் தானா நடக்கேலை. சிலர் இந்த மாநாட்டைக் குழப்பப்போயினம் எண்டு பட்சிக்கு நாலைஞ்சு நாளைக்கு முதலே தெரியும். ஆனாலும் அதை முதலே சொல்லி, குழப்பத்தை இன்னும் பெரிசாக்கக்கூடாதெல்லோ. ஆனால் இப்பதான் மாநாடு குழம்பிட்டுதே. அதால இப்ப அதைச் சொல்லியே ஆகோணும்.

யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு ஹொட்டலிலதான் முந்தி விக்கியரைக் கவுக்கிறதுக்கு சதி ஆலோசனை நடந்தது. அதே ஆக்கள் நாலைஞ்சு நாளைக்கு முதல், அதே ஹொட்டலுக்குப் போயிருக்கினம். தமிழரசுக் கட்சியின்ர புதுத்தலைவரா சிறீதரனை இருக்க விடக்கூடாது எண்டு வந்தவை எல்லாரும் தங்கட உள்ளக்கிடக்கையை வெளியில கொட்டித் தீர்த்திருக்கினம். மாவையர் கடைசிநேரத்தில, பொதுச்சபைப் பட்டியலில இல்லாத 7 பேரைக் கொண்டந்து வாக்களிக்க விட்டது சட்டவிரோதம் எண்டு வழக்குப் போடுறதைப் பற்றித்தான் முதல்ல கதைபட்டிருக்கு. அப்பிடி வழக்குப் போட்டால் சிறீதரன் தலைவரா இருக்கிறதுக்கும் இடைக்காலத் தடை கிடைக்கும் எண்டது அவையின்ர எண்ணம். ஆனால் அந்தப் பட்டியலில வந்தவையை சிறீதரனும், சுமந்திரனும் சம்மதிச்சுத்தான், வாக்களிக்கவிட்டவை. அதால அதைவைச்சு வழக்குப் போட்டால் வெல்ல ஏலாது எண்டு அவையே முடிவெடுத்திருக்கினம்.

அதுக்குப் பிறகுதான், மாநாட்டைக் குழப்புவம் எண்டு முடிவெடுத்திருக்கினம். எப்பிடியும் சிறீதரன் தரப்பு, மட்டக்களப்பில இருந்து சிறீநேசனைத் தான் பொதுசெயலாளர் பதவிக்கு போடப்போயினம் எண்டதும் எல்லாருக்கும் தெரிஞ்சிட்டு. அதால அதுக்கு எதிரா ஒராளைப் போட்டால், குழப்பம் வருமெண்டு யோசிச்சிருக்கினம். ஆனால் அப்பிடி ரண்டுபேர் போட்டி போட்டால், வாக்கெடுப்பு வைக்கவேண்டி வரும். வாக்கெடுப்பு வைச்சால், சிறீநேசன் வெல்லத்தான் வாய்ப்பிருக்கு. அதால தாங்கள் போடுற ஆள் வெல்லவும் வேணும், வாக்கெடுப்பும் வைக்காமல் இருக்கோணுமெண்டா அதுக்கு என்ன குறுக்குவழி எண்டு அந்த ஹொட்டலில அவை 'ரூம்' போட்டு யோசிச்சதில கிடைச்ச 'ரூட்' தான், மத்தியகுழுக் கூட்டம். மத்தியக் குழுவைக் கூடினால் அவைக்கு என்ன லாபம்? அதால என்ன குறுக்குவழி கிடைக்கும்? எண்டெல்லாம் கனக்க யோசிக்காதையுங்கோ. எல்லாம் விலாவாரியா பட்சி நாளைக்குச் சொல்லும்.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈரநில தினத்தை முன்னிட்டு மாணவர்கள் களப்பயணம்

யாழ்ப்பாணம், ஜன.29

சர்வதேச ஈரநில தினம் பெப்ரவரி 2ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகமும், சிறகுகள் அமையமும் இணைந்து இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலர் ம.சசிகரன் தலைமையில் பாடசாலை மாணவருக்கான களப்பயணம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாணவருக்கு ஈரநிலங்களின் முக்கியத்துவம், ஈரநிலங்கள் பாதுகாக்கப்படலில் ஒவ்வொரு தனிமனிதனதும் பங்களிப்பு என்பனவும் எடுத்துக் கூறப்பட்டன. ஈரநிலத்துக்கான இயற்கை நடைபயணத்தில் மாணவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-27)

## பேருந்து விபத்து ஒருவர் காயம்!


வவுனியா, ஜன. 29

வவுனியா கண்டி வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார். பேருந்தும் மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்துக்கு அருகாகவே விபத்து இடம்பெற்றுள்ளது. கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், காரொன்றுடன் மோதி பின்னர் பேருந்துடன் மோதியது என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ம-110)



கிளிநொச்சியில் 38 வருடங்களின் பின்னர், திரிசாரணர் தலைவர்களுக்கான, தமிழ்மொழி மூலமான பயிற்சிநெறி, கடந்த 21 ஆம், 22 ஆம் திகதிகளில் கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி நெறியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 27 திரிசாரணத் தலைவர்கள் பங்குபற்றினர். (ப-50)



## புகைப்படக் கண்காட்சி யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணப் புகைப்படக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள களம் என்னும் இடத்தில் நடைபெற்று வருகிறது. இந்தப் புகைப்படக் கண்காட்சி இன்று 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ப-20)

## முல்லைத்தீவு கிராமங்களுக்கு அபிவிருத்திச் சங்கம் தேவை

முல்லைத்தீவு, ஜன. 29

முல்லைத்தீவு மணவாளன்பட்டமுறிப்பு, மேழிவனம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி கிராம அபிவிருத்திச் சங்கமொன்றைத் தெரிவு செய்யுமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாக இந்தக் கிராமங்களுக்கு அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்படவில்லை. அதனால் கிராமத்துக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் கிராமமக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரவும் முடியாத நிலை காணப்படுகிறது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-13)





## சமுர்த்திக் கிளைகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ். மாவட்ட சமுர்த்தி பொங்கல் விழாவும் சமுர்த்தி வங்கிக் கிளைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சியில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் காலை 9.45 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் கோவில் மண்டபத்தில் பொங்கல் விழா நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சி.டி. களுவாராச்சி, மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ். சத்யசீலன், குறுநிதிப் பணிப்பாளர் எஸ். விக்கிரமசிங்க, சமூக அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் உபாலி புஸ்பகுமார மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் காமினி அபேயவிக்கிரம எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். மகிழ்ச்சியும் ஆதாயமும் உண்டாகும். நீண்டநாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் ஒரு புதிய சாதனையைப்படைப்பீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**இடபம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மிதுனம்:** துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். மாற்றங்கள் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள். மனசாட்சிப் படி செயற்படும் நாள்.

**கடகம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.புது வேலை கிடைக்கும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** வியாபாரத்தில் வேலையாள்கள் அதிருப்தி அடைவார்கள். மறதியால் பிரச்சினை வரக்கூடும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**துலாம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**விருச்சிகம் :** கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் அறிவுரைத் தருவார்கள்.

**தனுசு:** உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயற்படுவீர்கள். திடீர்முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**மகரம்:** வேலைச்சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. கனிவாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். சாதகமாக முடியும். ஆதரவு பெருகும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் திறமை வெளிப்படும்.

**மீனம்:** பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திறந்தவெளிச் சிறையில்...


இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு 30 ஆண்டுகால சிறைவாசத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர வேண்டிய கட்டாய நிலைமை தொடர்பில் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி தெளிவுபடுத்தியிருக்கின்றார். உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு உள்ளிட்ட நோய்களால் சாந்தன் அவதியுற்று வரும் நிலையில், இந்தியாவின் வேலூர்ச் சிறையில் அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகளில் திருப்தியில்லை என்றும் ஆதலால் அவருடைய சிகிச்சைகளைக் கருத்திற் கொண்டேனும் இலங்கைக்கு அவரை அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தன் கடிதங்களில் வலியுறுத்தியிருக்கின்றார் அவர்.

இந்த வழக்கில் கைதான ஏழு பேரில், முருகன், சாந்தன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இந்திய உச்ச நீதிமன்றம் இந்த வழக்கின் விசாரணைகளை முடிவுக்குக் கொண்டுவந்து அனைவரையும் விடுவித்துள்ள போதிலும், இலங்கையைச் சேர்ந்தோரின் நிலைமை 'சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்ததைப் போன்றதே'. கைதிகளாகச் சிறையிடப்பட்டிருந்த காலத்தை விடவும் தற்போது மோசமான முறையில் தாம் நடத்தப்படுவதாக அண்மையில் சாந்தன் ஒரு கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார். முன்னராவது, வாசிப்பதற்குப் புத்தகங்கள், நடைபயணத்துக்கு 'மூடப்பட்ட பரந்தவெளிகள்' என்றிருந்த (சிறை)வாழ்வு இப்போது ஒற்றைச் சிற்றறைக்குள் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. தனிமைச் சிறைகளுக்குள் அவர்கள் உழல்கின்றனர். கருத்துச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அல்லது அறவே இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றது. ஆக, விடுதலை என்ற பெயரில் இருந்ததையும் இழந்த கதையாகத்தான் மேற்படி வழக்கில் தொடர்புபட்டுள்ள இலங்கைத் தமிழர்களின் நிலைமை ஆகியுள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே இலங்கையைச் சேர்ந்தோரின் பிரதிநிதியாக சாந்தனின் தாயாருடைய வலியுறுத்தல் அமைந்திருக்கின்றது என்றும் கொள்ளலாம்.

'விடுதலையின் பின்னரான' நீண்ட சட்டப்போராட்டத்தின் முதல் படிநிலையை இவர்கள் இந்தியாவில் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்த நால்வரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று வழக்கு விசாரணைகளில் தெரிவித்துள்ளபோதிலும், அது சார்ந்த எந்த ஆவணங்களையும் இதுவரை அவர்கள் முன்வைக்கவில்லை. 'சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள்' என்ற பொதுவான மற்றொருபார்வையும் அவர்கள் மீது இருந்தே வந்திருக்கின்றது. ஆதலால், இந்தியாவுக்குள் பிரவேசித்த சட்டவிரோத நுழைவைக் காரணமாகக் காட்டி, அதன் கீழான சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில்தான் அவர்கள் அனுகப்படுவார்கள். தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற வருந்தத்தக்க சம்பவமும் அதுவேதான். அதனால்தான் விடுதலையின் பின்னரும் வேலூர் சிறையே அவர்களுக்குக் கதியென்றாகியிருக்கின்றது.

மறதி ஒரு தேசிய வியாதியென்பர். தமிழ்த் தேசிய இனத்துக்கு அந்த வியாதி ஒப்பீட்டளவில் கொஞ்சம் அதிகம்தான். இந்திய உச்சநீதிமன்றம் இவர்களை விடுவித்து ஓராண்டு கடந்துவிட்டது. ஆனால், அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக எத்தகைய வலியுறுத்தல்களை இங்குள்ள தமிழ்த் தலைமைகள் செய்தன? என்ற கேள்வி எழாமலில்லை. உண்மையில் தூதரக ரீதியில் அணுகப்பட வேண்டிய விடயமிது. ஆனால், இந்த விடயத்தில் தூதரக உறவுகள் மௌனித்தே இருக்கின்றன. எவரும் மூச்சுக்கூட விட்டதாயில்லை. தமிழ்த் தலைமைகளிடம் தவறு என்று பொத்தாம் பொதுவாக விரல் நீட்டிவிடவும் முடியாது. ஏனெனில், முருகன், சாந்தன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரை இலங்கைக்கு அழைத்துவர வேண்டும் என்று வலியுறுத்தி பொதுமக்களும் கனதியான போராட்டமொன்றை நடத்தியதாகவில்லை.

அத்துடன், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் காக்கின்ற மௌனம்கூட வேதனையானதே. இந்த வழக்கில் ஈழத்தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என்ற பாகுபாடு காட்டப்படக்கூடாது. அனைவரும் தமிழர்கள். அனைவரும் 30 ஆண்டுகளுக்கும் மேல் தம் வாழ்வை சிறையில் செலவிட்டுள்ளனர். எனவே, நான்கு இலங்கைத் தமிழர்களையும் அவர்களின் தாயகம் நோக்கி அனுப்பிவைக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழகத் தலைவர்களுக்கும் உண்டு.




# அடுத்துவரும் வாரங்களில் அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, ஜன.29

அடுத்துவரும் வாரங்களில் அமைச்சரவை மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அமர்வுகள் அடுத்தமாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்குமுன்னதாக அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தவும், சில புதியவர்களுக்குப் பதவிகளை வழங்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளக் கூடும் என்றும் கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

## மக்கள் கருத்தறிய ஜனாதிபதி முடிவு!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நாடு முழுவதும் மக்கள் கருத்துக்களைப் பெற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படு கின்றது.

அந்தக் கருத்துக் கணிப்பின் அடிப்படையிலேயே எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அவர் தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அதேநேரம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## தேர்தலுக்காக புதிய கூட்டணி

தேர்தலுக்காகப் பரந்துபட்ட கூட்டணி ஒன்று அமைக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நடைமுறை வேலைத்திட்டம் ஒன்று அவசியம். அதற்காக எதிர்காலத்தில் பரந்துபட்ட அரசில் கூட்டணியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் கலந்துரையாடப்பட்டு. தகுதியான வேட்பாளர் ஒருவரை நாங்கள் முன்னிறுத்துவோம் -என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## அரச சேவையை விரிவாக்க முடியாதாம்

அரச சேவையை விரிவுபடுத்த முடியாது என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

சனத்தொகை விகிதாசாரத்தில் உலகிலேயே அதிகளவான அரச ஊழியர்களைக் கொண்ட நாடாக இலங்கை உள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-இ)

## ரணிலுக்கு ஆதரவாக களமிறங்கும் கூட்டணி

கொழும்பு, ஜன. 29

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எமது 'புதிய கூட்டணி' ஆதரவளிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவால் அமைக்கப்பட்ட 'நியூ அலையன்ஸ்' என்ற புதிய கூட்டமைப்பின் பேரணி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிக உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து இந்தப் புதிய கூட்டணி உருவாக்கப்படுகிறது. இந்தக் கூட்டணியின் ஆதரவு ரணிலுக்கே என்றும் அவர் தெரிவித்தார்.

பேரணியில் அமைச்சர்களான நளின் பெர்னாண்டோ, சுசில் பிரேமஜயந்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-இ)

### நாளை

30.01.2024
செவ்வாய்க்கிழமை
தை – 16
சுபநேரம் : 11.06 – 12.36
ராகுகாலம் : 03.36 – 05.06
சஷ்டி சூரா குருபூசை

### நாளொரு நல்வார்த்தை

நோய்களை விட மோசமானது அவற்றுக்கான தீர்வு.

- பிரான்சிஸ் பெக்கான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கப்பலில் ஏவுகணை: வடகொரியா மிரட்டல்

பியாங்யாங், ஜன. 29

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை கப்பலிலிருந்து சோதித்து, அந்தச் சோதனையில் வெற்றியீட்டியுள்ளது வடகொரியா.

கொரியத் தீபகற்பத்தில் கடந்த சில தசாப்தங்களாகவே போர்ப் பதற்றம் மிகுந்துள்ளது.

அண்மைக்காலமாகத் தென்கொரியாவில் அமெரிக்கத் தலையீடும் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் கூட்டு இராணுவப் பயிற்சிகளும் அதிகரித்துள்ள நிலையில், இதற்குப் பதிலடியாக வடகொரியாவும் பல்வேறுபட்ட இராணுவப் பயிற்சிகளை, ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது. (ம)

### ரஷ்யப் படைகளால்

# அவ்திவ்கா நகர் சுற்றிவளைப்பு!



**மொஸ்கோ, ஜன. 29**

**உக்ரைனின் கேந்திர முக்கியத்துவம்மிக்க அவ்திவ்கா நகரம்,ரஷ்யப்படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.**

கிரீமியாவுக்கு அருகிலுள்ள இயற்கை வளம் மிகுந்த அவ்திவ்கா நகரையே ரஷ்யப் படைகள் முற்றுகையிட்டுள்ளன. இந்த நகரை ரஷ்யா ஆக்கிரமிக்கும் பட்சத்தில் கிரீமியாவுடனான தனது தொடர்பெல்லையை ரஷ்யா விரிவுபடுத்தும். அத்துடன் உக்ரைனை மேற்குப் பகுதியில் இருந்து இலகுவாகக் கண்காணிக்கும்.

ரஷ்யாவின் சுற்றிவளைப்புக்கெதிராக உக்ரைன் பல முனைத் தாக்குதல்களை நடத்திவருகின்றது. கூடுதலான சிப்பாய்கள் அந்தப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் உக்ரைன் இராணுவத் தலைமையகம் உறுதிப்படுத்தியுள்ளது. (ம)



## நீதிமன்ற உத்தரவைக் கடாசி இஸ்ரேல் மூர்க்கம்

காஸா, ஜன. 29

காஸாவில் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவிட்ட 24 மணிநேரத்தில், அங்கு காட்டுமிராண்டித்தனமாக தாக்குதலை நடத்தி 175 பேரை இஸ்ரேல் இராணுவம் கொன்று குவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் முன்னெடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும், இஸ்ரேலின் தாக்குதல்களைப் போர்க்குற்றம் என்று அறிவிக்கவேண்டும் என்றும் இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்குத் தொடர்ந்தது.

நீதிமன்று, அங்கு முன்னெடுக்கும் தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்த வேண்டும். அதேவேளை, இஸ்ரேலின் போர்க் குற்றங்கள் தொடர்பில் தென்னாபிரிக்கா உரிய ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இடைக்காலக் கட்டளை பிறப்பித்தது.

ஆனால், சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கண்டுகொள்ளாமல் காஸா மீது கடந்த 24 மணிநேரத்தில் கடும் தாக்குதல்களை இஸ்ரேலிய இராணுவம் நிகழ்த்தியுள்ளது. (ம)

### 'டைட்டானிக்கை'விட 5 மடங்கான

## 'ஐகன் ஒஃப் தி சீஸ்' கப்பல் முதல் பயணம் ஆரம்பம்

வொஷிங்டன், ஜன. 29

உலகின் மிகப் பிரமாண்டமான ரோயல் கரீபியன் நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் சொகுசு கப்பலான 'ஐகன் ஒஃப் தி சீஸ்' (Icon of the Seas) முதலாவது பயணத்தை ஆரம்பித்துள்ளது. இந்தக் கப்பல் டைட்டானிக் கப்பலை விட ஐந்து மடங்கு பெரியது.

இந்தச் சொகுசு கப்பல் 20 தளங்களைக் கொண்டுள்ளதுடன் 365 மீற்றர் நீளம் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

கப்பலுக்குள் 6 நீர்வீழ்ச்சிகள், 7 நீச்சல் குளங்கள், ஒரு பனிக்கட்டி சறுக்கு மைதானம் என்பன இருக்கின்றன. அத்துடன் 3 தியேட்டர்கள், 40 ஹோட்டல்கள், மது நிலையங்கள் என்பனவும் அமைந்துள்ளன. (ச-இ)

## ஆதரவற்றுள்ள சடலங்களுக்கு இறுதிச்சடங்கு செய்யும் பெண்

### இந்தியாவில் நெகிழ்ச்சி

புதுடில்லி, ஜன. 29

மருத்துவமனைகளில் ஆதரவற்ற நிலையில் உயிரிழக்கும் சடலங்களைப் பொறுப்பேற்று இறுதிச்சடங்கு செய்யும் பெண் தொடர்பான தகவல்கள் இந்திய ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

டெல்லி ஷாத்ரா பகுதியைச் சேர்ந்தவர் 26 வயதுடைய பூஜா சர்மா என்ற பெண்ணே, மருத்துவமனைகளில் நீண்டகாலமாகப் பொறுப்பேற்கப்படாமல் இருக்கும் ஆதரவற்ற சடலங்களுக்கு இறுதிச் சடங்கை மேற்கொண்டு வருகின்றார். கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 4 ஆயிரம் உடல்களுக்கு இறுதிச்சடங்குகளை அவர் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



## அவதூறு வழக்கு; ட்ரம்ப் நஷ்டஈடு

வொஷிங்டன், ஜன. 9

அவதூறு வழக்கொன்றில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 83 மில்லியன் டொலர் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் நியூயோர்க் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொதுவெளியில் தன்னை அவமானப் படுத்தியதாக 80 வயதான எழுத்தாளர் ஜீன் கரோல், ட்ரம்புக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். தனக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தார்.

வழக்கை விசாரித்த நியூயோர்க் நீதிமன்றம் 83 மில்லியன் டொலர் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு அபத்தமானது எனவும், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்வேன் எனவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். (ச-இ)




## செல்லப்பிராணிகளுக்கு சொத்தை எழுதிவைத்த மூதாட்டி

பீஜிங், ஜன. 29

சீனாவில் மூதாட்டியொருவர் தனது பல கோடி மதிப்புள்ள சொத்துகளை தான் வளர்க்கும் நாய் மற்றும் பூனைகளுக்கு எழுதி வைத்துள்ளார்.

குறித்த மூதாட்டி தனக்கு சொந்தமான சுமார் 23 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளை முதலில் தனது 3 பிள்ளைகளுக்கும் பங்கிட்டு உயில் எழுதி வைத்துள்ளார்.

மூதாட்டி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டதையடுத்து அவரது பிள்ளைகள் மூவரும் அவரைப் புறக்கணித்த நிலையில் வேதனை அடைந்த மூதாட்டி தனது சொத்துகள் அனைத்தையும் தான் வளர்க்கும் நாய் மற்றும் பூனைக்கு எழுதி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிகழ்நிலைக் காப்புச்சட்டத்துக்கு அஞ்சாமல் அரசை விமர்சியுங்கள்

## மேர்வின் சில்வா விளாசல்

கொழும்பு, ஜன. 29

நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டாலும் சமூகவலைத்தளங்களில் பதிவிடுவதை நிறுத்த வேண்டாம். சிறைச்சாலைகள் நிறையட்டும். அப்போதுதான் ஆட்சியாளர்களைத் தோற்கடிக்க முடியும் - என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இவர்களை (ஆட்சியாளர்களை) சரமாரியாக விமர்சியுங்கள், சமூகவலைத் தளங்களில் போட வேண்டிய பதிவுகளைப் போடுங்கள், செய்ய வேண்டியவற்றை செய்யுங்கள், லட்சக்கணக்கானவர்களை சிறையில் அடைக்கட்டும். அப்போதுதான் இந்த முயற்சியில் அவர்கள் தோற்பார்கள். இப்படிதான் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அரகலய காலத்திலும் லட்சக்கணக்கானவர்களுடன் வாருங்கள் என நான் அழைப்பு விடுத்திருந்தேன்.

நிகழ்நிலைக்காப்புச் சட்டத்துக்கு எதிர்ப்பு என்றால், அது தொடர்பில் ஊடகங்களில் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்காமல் செயலில் இறங்கி அரசாங்கத்தை எதிர்க்கவேண்டும் - என்றார். (ம-44)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராமன் தர்மலிங்கம்

(மகாலிங்கம்)

புகையிரத பகுதி ஓய்வூதியர்)

திதி: சங்கடஹர சதுர்த்தி

(29.01.2024)

தோற்றம்

26.06.1942

மறைவு

10.01.2023

உயிர்தந்த எம் தந்தையே
ஓராண்டு போனதப்பா
உன் முகம் பாராமல்
குன்றின் மணி விளக்கே - எங்கள்
குல தெய்வமே!

வல்லமையாய் வாழ்ந்து
வழி நடத்திய எம் தந்தையே
நிழல் குடையாய் எம்மை
நித்தமும் காத்தவரே

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தருமசக்தி இல்லம்
வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு.


குடும்பத்தினர்.
077 878 9128

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சதாசிவம் தெட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற முதலியார்)



தோற்றம் 16.08.1947

மறைவு 30.01.2013

திதி: சங்கடஹரசதுர்த்தி (29.01.2024)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!

விண்ணுலகம் சென்று இன்று பதினொரு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


கஜபதி செட்டிலேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி - சிவயோகமணி

(cs 23323) (2)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1942



மறைவு 27 . 01 . 2024

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.229, திருநகர் தெற்கு கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் (27.01.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தர் தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், நாகராணி (கிளி - திருநகர்), மகேஸ்வரி (சித்திரா - நெடுந்தீவு), மகேந்திரன் (ராசன் - திருகோணமலை), சிவபாலன் (பாலா - கொக்குவில்), விக்னேஸ்வரன் (வத்தா - நெடுந்தீவு), கோணேஸ்வரன் (இந்தியா), காலஞ்சென்ற சுகிர்தா (சுகி) அவர்களின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரன், ஆனந்தகுமார், அம்பிகாவதி, தயாநிதி, சசிகலா, ராஜி, ஆகியேரின் அன்பு மாமனாரும், கோபாலுபிள்ளை, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சின்னப்பு, பார்வதி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேஸ்வரி, பூரணம், காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, கந்தையா, நாகநாதி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், மகிந்தன் - தயானி, கௌரி - முரளி, கயன், மதுசன் - தர்சி (ஆசிரியர்), சுதர்சன் (யது மொவைல்), கிருஸ்ணரூபா - கிருசாந்தன் (ஆசிரியர் - கோணாவில் ம.வி), பிரசாந், ரஜித் (பிரதேச செயலகம்), பாரத், ஜெயகாந், லிர்த்திகா, கரிஸ், கர்சனா, டிலக்சன், வினுசன், தனுசன், சதுர்சன், யதுசா, நிருசன், மதன், லக்கி, விக்கி, சுகி ஆகியோரின் பேரனும், யதுசிகா, தேயஸ்வினி, கினோயா, அக்சயன், கிருசாலினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.229, திருநகர் தெற்கு, கிளிநொச்சியில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 229, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

தகவல்: குடும்பத்தினர்
077 873 6558

(cs55730) N-1)

# வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவி வெற்றிடம் வெளிவாரி நியமனம்

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆண் பெண் இருபாலாரும்)

01. பதவி / சம்பளஅளவுத்திட்டம் (சுற்றுநிருபம் 02/2022 இன் படி) — வெளிக்கள் அலுவலர் 209/12
18,820-170X10-185X10-22,370.00
வெற்றிடம் - 01
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

02. தகைமைகள்: (சுற்றுநிருபம் 01/2021)

I. கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத் திட்ட பதவியில் சம்மந்தப்பட்ட துறையில் / எழுதுனர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவுப் ஊழியர் 14 வது சம்பளத் திட்ட பதவியில் சம்மந்தப்பட்ட துறையில்/ எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

II. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஆக்க குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

III. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத சிங்களம் / தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுட னான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால் அனுபவம்

03. வயதெல்லை : 18 - 45 ற்கு உட்பட்டிருத்தல்
04 விண்ணப்ப முடிவு திகதி : 19.02.2024
05 குறிப்பு:

* கூட்டுறவு சங்கங்களின் நிரந்தர பணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். (கூட்டுறவு பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல)
* விண்ணப்பிக்கும் பதவி, முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தற்போதைய வசிப்பிட முகவரி, அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, வயது, பால், கல்வித்தகமை, தொழிற் கல்வித்தகமை சேவைத்தகமை, ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை தாங்களே தயாரித்து, கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு "தலைவர, வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.44, குட்செட் வீதி, வவுனியா" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

திரு. சு.புவனேந்திரராசா - JP
தலைவர்
வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.44,குட்செட் வீதி,வவுனியா
T.P NO: 024-2222636, 024-2222341

திகதி 2024.01.29

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு விழா

கொடிகாமம், ஜன. 29

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் மாவட்ட பண்பாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) யாழ். மாவட்ட பண்பாட்டுப் பேரவையின் தலைவரும், மாவட்டச் செயலருமான அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன், துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், நல்லூர் சாகித்திய ரத்னா க.சட்டநாதன் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)

# வர்த்தமானி இரத்து

கொழும்பு, ஜன. 29

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் வெளியிடப்பட்ட இரண்டு விசேட வர்த்தமானிகளை தற்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இரத்து செய்துள்ளார்.

இலங்கை கராத்தே சம்மேளனம் மற்றும் இலங்கை மோட்டார் விளையாட்டுச் சங்கங்கள் ஆகியவற்றின் இடைக்கால குழுக்களை கலைத்தே விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார் ஹரின்.

கராத்தே சம்மேளனத்தின் விவகாரங்கள் தொடர்பில் கையாளும் பொறுப்பு கடந்த தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

ஓம் ஸ்ரீ [illegible]

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 10 • 1955

உதிர்வு 28 • 01 • 2024



**முருகன் ஆச்சாரி பிரசாத் ஆச்சாரி**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் ஆச்சாரி பிரசாத் ஆச்சாரி அவர்கள் நேற்று (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 53735) S-1

## காணவில்லை



ஈஞ்சமோட்டை
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
**சதானந்தம் செல்வராணி**
என்பவரை
கடந்த 08.01.2024 முதல்
காணவில்லை இவரை
கண்டவர்கள்
**077 642 6746,**
**074 303 2092** இற்கு
அறியத்தருவும்

தகவல்:
கு.ரமேந்திரன் (ராயு)

(CS 53731) K-1

## IFC

பிரெஞ்ச் (*French*) புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**05.02.2024**

**A - 1, A-2, B-1**

France கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சான்றிதழ்கள்.

இடம்: இல.136, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி.

**076 726 3087**

(cs.53732) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 • 05 • 1943

மறைவு 27 • 01 • 2024



**சின்னக்குட்டி அருச்சுனன்**

கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி அருச்சுனன் நேற்றுமுன்தினம் (27.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அருமைநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், இலட்சுமணன் மற்றும் தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான சண்முகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவாஜினி, ஸ்ரீ ரமேஸ்வரன், ஸ்ரீரமணன், ஜீவனா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரன், ஸ்ரீரஞ்சினி, நந்தினி, அருந்தவநாதன், டினேசிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிவேதா, நர்த்தனன், வருண், சகானா, சாகித்தியன், நர்மிதா, மதுமிதா, சாருஜன், அர்ச்சனா, அர்ச்சதன், அபிமன்யு, கர்ச்சிதா ஆகியோரின் பேரனும், சன்விகன், சஞ்சனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி, இளவாலை.
077 707 8846

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 06 • 1935

மறைவு 28 • 01 • 2024



**செல்வி குணபூபதி சிவசுப்பிரமணியம்**

(முன்னாள் காரியதரிசி, ஆனைப்பந்தி வைத்திய நிலையம்)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குணபூபதி சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் அன்னம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ராஜபூபதி, இரத்தினபூபதி, மகேந்திரன், சுவர்ணபூபதி மற்றும் சுரேந்திரன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற Dr.ஆனந்தராஜாவின் மைத்துனியும், அசோகன், வள்ளி, முருகன் ஆகியோரின் சிறிய தாயும், கீதா, நிரஞ்சன், கிருஷ்ண பிரியா, காலஞ்சென்ற கெமுனு பெரேரா, சர்மினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 500, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சுரேந்திரன்
([illegible])


(CS 53734) S-1

## நீங்கா நினைவில்

22ஆம் ஆண்டு

மலர்வு 27.04.1938

உதிர்வு 01.02.2002




**அமரர் வெ.வேலு**
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)
திதி: 29.01.2024

28ஆம் ஆண்டு

அன்னை மடியில் 21.02.1977

அமைதியின் அடியில் 13.06.1996



**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும்
நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
[illegible] சுன்னாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் ஒன்றியத் தலைவர் கே.துவாரகன் தலைமையில் நடைபெற்றது. அனைத்துப் பீடங்களினது மாணவர்களும் கலந்துகொண்டனர். தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் கலை, பண்பாட்டு நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. (ப-66)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் சமூகப் பணிகளின் ஓர் அங்கமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 வீடுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டன. இந்தத் திட்டத்தினூடாக ஏற்கனவே 9 வீடுகள் ஆலயத்தால் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-27)



நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நல்லூர்ப் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற விழிப்புணர்வில் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி, முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், சவால்களை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ப-66)

தொழில்நுட்பக் கற்கையைத் தொடரும் மாணவர்களைத் திறன்மிக்க முயற்சியாளர்களாக உருவாக்குவதற்கான திறன் விருத்திச் செயலமர்வு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. குறித்த செயலமர்வு நல்லூர்ப் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தரால் நடத்தப்பட்டது. செயலமர்வில் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ப-66)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 07 . 1944



மறைவு 21 . 01 . 2022

அமரர்

**ஜெகசோதிமலர் சடாட்சரம்**

திதி: சாங்கடகர சதுர்த்தி

ஆண்டுகள் இரண்டு ஆனது அம்மா!
எங்கள் உயிராக வாழ்ந்து
எம் உணர்வுகளோடு கலந்த எங்கள்
அம்மாவே!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம்முள்ளே கலந்து நிலைத்து
வாழ்கின்றீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!

குடும்பத்தினர்



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டச் செயலகமும், கோப்பாய்ப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய தைப்பூசவிழா இருபாலை தெற்கு வேளாத்தோப்பு மதுரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. தொடர்ந்து தமிழர்களின் பாரம்பரியக் கலை வடிவங்களான சிலம்பாட்டம், நாட்டாரிசை, பல்லியம் மற்றும் கீர்த்தனைப் பாடல்கள் என்பன இடம்பெற்றன. (ப-66)



இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் தொண்டர்கள் ஆலய அறங்காவலர் சபையினரால் கடந்த வியாழக்கிழமை பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, கடந்த 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை ஆலயச் சூழலில் சிறப்பான முறையில் சேவையாற்றியவர்களுக்கே நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபை அலுவலகத்தில் வைத்து பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கோயில் எசமானி காலமானார்



யாழ்ப்பாணம், ஜன. 29

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பத்தாவது நிர்வாக அதிகாரி அமரர் குமாரதாஸ் மாப்பாண முதலியாரது துணைவியாரும் தற்போதைய பதினொராவது நிர்வாக அதிகாரி குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ மாப்பாண முதலியாராது தாயாருமாகிய சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று குகபதமடைந்தார். அன்னாரது இறுதிகிரியைகள் யாழ்ப்பாணம் நல்லூர் மாப்பாணர் வளவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெற்று தகன கிரிகைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (ஓ-இ)

## சட்டவிரோத நடவடிக்கை சந்தேகநபர் கைதாகினார்

யாழ்ப்பாணம், ஜன. 29

அல்லைப்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் மாட்டு இறைச்சியையும் அளவுக்கதிகமான மதுபானப்போத்தல்களையும் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை நேற்று மதியம் கைது செய்துள்ளனர்.


சட்டவிரோதமானமுறையில் மாட்டை இறைச்சியாக்குவதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்துக்கு விரைந்த பொலிஸார் வளவொன்றினுள் மாடு இறைச்சியாக்கப்பட்டிருப்பதை அடையாளம் கண்டனர். இதனையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் வீடொன்றை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

வீட்டின் குளிர்சாதனப் பெட்டியில் இருந்து 10 கிலோ மாட்டு இறைச்சியையும்,20 மதுபானப் போத்தல் களையும் கைப்பற்றினர்.

இவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 35 வயதான சந்தேகநபரைக் கைது செய்தனர். (அ-ஓ-125)

## ஐ.நா. தடுத்தாலும் 'யுக்திய' தொடரும்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சூளுரை



கொழும்பு, ஜன. 29

இது எமது நாடு, எமக்குத் தேவையானவற்றைதான் செய்தோம். ஐ.நா. அல்ல யார் என்ன சொன்னாலும் நான் அமைச்சராக இருக்கும்வரை எமது திட்டத்தைக் கைவிடப்போவதில்லை - இவ்வாறு சூளுரைத்துள்ளார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரான டிரான் அலஸ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் விற்பனை மற்றும் பாதாள குழு செயற்பாடுகளுக்கு முடிவு கட்டவேண்டும் என்பது ஏழு மாதங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட முடிவு. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகவே பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிக்குமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்தேன். போதைப்பொருள் வியாபாரமும், பாதாளக்குழுக்களின் செயற்பாடுகளும் அப்படியே தொடர்ந்திருந்தால் இலங்கை சிக்காகோ போல் ஆகியிருக்கும். ஜூன் 30 ஆம் திகதி ஆகும்போது மாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

சர்வதேசத்தில் இருந்து அழுத்தம் வருகின்றது. ஐ.நா மனித உரிமைகள் பேரவை அழுத்தம் கொடுக்கின்றது. 'யுக்திய' நடவடிக்கையை நிறுத்துமாறு அறிக்கை விடுக்கப்படு கின்றது. இது எமது நாடு, எமக்குத் தேவையானவற்றைதான் இங்கு செய்வோம், எனவே, ஐ.நா., சர்வதேசம் சொல்வதால் எமது நடவடிக்கையை நிறுத்தப்போவதில்லை - என்றார். (அ-ஓ-44)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

பருத்தித்துறை, ஜன. 29

கரணவாய் தெற்கிலுள்ள தோட்டக்கிணற்றிலிருந்து மூதாட்டியின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தை சேர்ந்த சிவஞானம் கனகமணி (வயது - 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூதாட்டி வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையில் வீட்டுக்கு அருகாமையில் உள்ள தோட்டக் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சடலம் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-ஓ-100)


## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 03 . 1956 — மறைவு 26 . 01 . 2024



### சின்னையா சிவம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும். அளவெட்டி கும்பழாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவம் அவர்கள் கடந்த (26.01.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா அருளம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும். கலாநிதியின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற அப்புத்துரை இராசாத்தியின் அன்பு மருமகனும். ஜெகதீஸ்வரன். சத்தியமூர்த்தி. நிர்மலா. கோணேஸ்வரன். ஜெயா ஆகியோரின் மைத்துனரும். கவிதா. பத்மதர்சினி. செல்வநாயகம். ரூபி. விஜயகுமார் ஆகியோரின் சகலனும். ஜனோஸ்ரன். ஜனோஜா. ஜனுஸ்ரன். தேனுஜா. அபிஷனா. வதீஸ் ஆகியோரின் மாமனும். கஜானா. கிசானி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இத் தகவலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்மாலை,
அளவெட்டி வடக்கு.
CS (41661) S-1
தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 01 . 1952 — மறைவு 28 . 01 . 2024



### அமரர் புண்ணியமூர்த்தி நாகரெத்தினம் (குண்டுமணி பத்தர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வராகி அம்மன் கோவில் மேற்கு, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி நாகரெத்தினம் அவர்கள் கடந்த (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் செல்வரத்தினம் அன்பு மருமகனும், ஞானரெட்ணம் அவர்களின் அன்புக் கணவரும், இந்துஜா, சுகர்ணன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற யசோதை, பூரணம், காசிபிள்ளை, லட்சுமி, கந்தசாமி முருகையா மற்றும் சண்முகராஜா, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயரட்ணம், மற்றும் சந்தானலட்சுமி, ஜெயலட்சுமி, யோகரத்தினம், ஜெயசோதி, ஜீவரட்ணம் (இந்தியா), கணேசரத்தினம் (பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வராகி அம்மன் கோவில் மேற்கு, கொக்குவில் மேற்கு.
தகவல்: குடும்பத்தினர்.
077 653 9275
(CS 29313) V-1

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன்



தோற்றம் 03.03.1960 — மறைவு 27.01.2024

யாழ் மாவிட்டபுரம் கீரிமலை வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Feltham த்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் அவர்கள் கடந்த (27.01.2024) சனிக்கிழமை அதிகாலை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு சுப்பர் சங்கரப்பிள்ளை, திருமதி தங்கமணி சங்கரப்பிள்ளையின் அன்புப் புதல்வனும் , திரு சின்னத்துரை இராசா, திருமதி சுந்தரம் இராசா ஆகியோரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (லண்டன்), கமலாம்பிகை (இலங்கை), பாலசிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற கணேசமூர்த்தி, கணேசானந்தன் (லண்டன்), லகிதேவி (சுவீடன்), காலஞ்சென்ற லீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரராஜன் (இலங்கை), இராஜேஸ்வரி (கனடா), ரவீந்திரராஜா (இந்தியா), காலஞ்சென்ற மகேந்திரராஜா, சௌந்தரராஜா (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும், இந்துமதி, சிவசுப்பிரமணியம் , சாந்தி, பாஸ்கரன், சுஜித்தா, காலஞ்சென்ற சங்கரலிங்கம், திருமணி, குகநாதன், தங்கவதி, குமுதினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 331 8350
தகவல்: சுந்தரராஜன் (மைத்துனர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.சிறீதரனுக்கு கூட்டணி வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் த.இராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லாத சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு வாழ்த்துக்கள். தமிழர் விடுதலை கூட்டணியின் தாய்க் கட்சியில் ஒன்றான தமிழரசுக் கட்சி, தந்தை செல்வாவால் உயர்ந்த இலட்சியங்களை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அந்த நோக்கம் இன்றுவரை நிறைவேறாத கனவாகவே இருந்து வருகின்றது. அந்தக் கனவை நனவாக்க அனைத்துத் தரப்புகளையும் இணைத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்புகின்றது.

இக்கட்டான காலகட்டத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள சிறீதரன் அதனை உணர்ந்து செயற்படவேண்டும். மேலும் தந்தை செல்வாவின் இலட்சியத்தை நிறைவேற்ற உறுதியுடன் பயணிக்கவேண்டும் - என்றார். (அ-ஒ-125)

## குழப்பங்களுக்குத்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இருவரும், மாவை.சேனாதிராசாவை அவரது வீடு தேடிச் சென்று சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் மாவை. சேனாதிராசா 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்ததாவது:-

இன்றைய தினம் (நேற்று) நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன் இருவரும் எனது வீட்டுக்கு வருகை தந்து பிரச்சினைகள் சம்பந்தமாகவும், மாநாட்டை எப்போது நடத்தலாம் என்பது தொடர்பாகவும் பேசினர். நான் சில நாள்களுக்கு நாட்டில் இருக்கமாட்டேன். திரும்பி வருவதற்குள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினேன். குறிப்பாக கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளுடன் பேசுமாறு குறிப்பிட்டேன். அதன் பின்னர் மாநாடுக்கான திகதியை தீர்மானிக்க முடியும் என்று தெரிவித்துள்ளேன். இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளைக் காண்பதற்கு முயற்சிப்பதாகவும் அவர்கள் என்னிடம் உறுதியளித்துள்ளனர். அவர்கள் இருவரும் இணைந்தே இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காணவுள்ளனர் - என்றார். (அ-ஒ-5-125)

## மன்னார்...

மன்னார், கணேசபுரத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பழனி பரம்சோதி (வயது - 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பெறாமகளுடன் சென்றபோது குஞ்சுக்குளம் பாலத்துக்கு அருகில் விபத்துக்குள்ளாகியுள்ளார். இவரது மோட்டார் சைக்கிளை முந்திச் சென்ற டிப்பர் எதிரே வந்த டிப்பருடன் மோதியுள்ளது. இதன்போது டிப்பரின் பின்னால் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. காயமடைந்த அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## இலங்கைக்...

தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் தலையீடு காரணமாக நவம்பர் 2023இல் விதிக்கப்பட்ட தடை, இலங்கை அரசாங்கத்தின் உத்தரவாதத்துடன் தற்போது நீக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## வீட்டுச்...

ஒரு பொதுவான சின்னமிருக்கவேண்டும். அந்தச் சின்னம் வீடாகவும் இருக்க முடியும். தமிழரசுக் கட்சி தனது வீட்டுச் சின்னத்தை விட்டுக் கொடுப்பதன் மூலம் அதனைக் கூட்டமைப்பின் சின்னமாக மாற்றமுடியும் எனப் புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சிக்குள் தற்போது காணப்படும் உடைவுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் சம்பந்தன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவிருந்த நிலையில் அனைவரும் சம்பந்தனைத் தலைவராக ஏற்று ஒரு குடையின் கீழ் செயற்பட்டிருந்த போதிலும் பல கசப்பான அனுபவங்கள் எங்களுக்கு ஏற்பட்டிருந்தன.

இதன் காரணமாக கூட்டமைப்பு பதியப்பட வேண்டுமெனப் பலரும் வலியுறுத்திக் கூறி வந்தார்கள். இதன்காரணமாக ஒரு சிலர் கூட்டமைப்பிலிருந்து கூட வெளியேறிச் சென்றிருக்கின்றனர் - என்றார். (அ-ஒ-66)

## மாநாடு...

களுவாஞ்சிக்குடியில் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கான ஆலோசனைக்கூட்டமாக தமிழ் அரசுக் கட்சியின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதன்போது சுமந்திரனை உபதலைவராக நியமிக்குமாறு சிறீதரன் கோரியிருந்தார். எனினும் அதனை ஏற்றுக் கொள்ளாது தம்மை பொதுச்செயலாளராக நியமிக்குமாறு இங்கு சுமந்திரன் கோரிக்கை விடுத்திருந்தார். கட்சி பிளவுபடாமல் அனைவரையும் ஒருங்கிணைத்துக் கொண்டு செல்லவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது - என்றார். (அ-ஒ-இ)

## நுனிப்புல்...

கான பரிகாரம் போன்றவற்றை சர்வதேச நீதிமன்றத்தின் மூலமே பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் உள்நாட்டுப் பொறிமுறையில் நம்பிக்கை கொள்ளமுடியாது எனவும் சொல்லுகின்ற தமிழ் அரசியல் தரப்புகள், தமிழ் மக்கள் மத்தியில் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான மாயையை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

தற்போது, இஸ்ரேல் விவகாரத்தில் தென்னாபிரிக்காவால் சர்வதேச நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது, சர்வதேச நீதிமன்றின் சிந்தனை மற்றும் பார்வை எத்தகையது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான மக்களை தினமும் அழித்துக் கொண்டிருக்கிற தாக்குதல்களை நிறுத்துமாறு உலகின் அதியுச்ச நீதிமன்றக் கட்டமைப்பான சர்வதேச குற்றவியல்நீதிமன்றம் உத்தரவிடவில்லை. இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றம் தொடர்பான சர்வதேச நியமங்களை மதித்து நடக்குமாறு சொல்லியிருக்கிறது. காஸாவில் குறுகிய பிரதேசத்தில் பல இலட்சம் அப்பாவி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்பதோ, தாக்குதல் தொடர்ந்தால் அப்பாவி மக்களின் அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்பதோ சர்வதேச நீதிமன்றுக்குத் தெரியாத சமாச்சாரங்கள் இல்லை. அப்படியிருந்தும் தாக்குதலை நிறுத்துமாறு தீர்ப்பில் சொல்லப்படவில்லை.

இவ்வாறான சம்பங்கள் ஊடாக, சர்வதேச கட்டமைப்புகளின் மனோநிலையையும் அவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் எத்தகையவை என்பதையும் எமது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும், என்று அந்த ஊடக அறிக்கையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கடந்த 14 ஆண்டுகளாக இறுதிப்போரின் போதான சம்பவங்களுக்கு சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்தவேண்டும் என்றே கோரி வருகின்றனர். சர்வதேச நீதிமன்றமும், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றமும் வேறுவேறானவை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அறிக்கையில் இரண்டையும் போட்டுக் குழப்பியடித்துள்ளதுடன், தமிழ் மக்கள் சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகத் தீர்வைக் கோருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5-125)

## ஆபத்தான...

பலாலி, அன்ரனிபுரத்தைச் சேர்ந்த இளம் குடும்பத்தலைவர் தனது படகில் இரண்டரை வயதான தனது குழந்தையையும், தனது சகோதரியின் 7 வயதான மகளையும் அழைத்துக் கொண்டு படகோட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

படகை வளைத்து வளைத்து ஓடிய நிலையில் படகினுள் நீர் உட்புக தொடங்கியுள்ளது. இதனை அவதானித்த காங்கேசன்துறை கடற்படையினர் உடனடியாக மயிலிட்டிக் கடற்பரப்பில் படகோடு மூவரையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர். படகைச் செலுத்தியவர் மதுபோதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-125)

## கடலுக்குச்...

கைக்காக சென்றிருந்த நிலையில் நான்கு நாளாகியும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோசப் மக்சிமஸ் சுரேஸ்குமார் (வயது-32) என்ற இளைஞரே இவ்வாறு கடலுக்குச் சென்ற நிலையில் காணாமற்போயுள்ளார்.

இழுவைப் படகில் மேலும் இருவருடன் வழமைபோன்று கடந்த 24ஆம் திகதி புதன்கிழமை மதியம் கடலுக்குச் சென்றிருந்த நிலையில் காணாமற்போயுள்ளார்.

அன்றையதினம் குறித்த இளைஞர் மடிவலை மூலம் இரண்டு பாடு இழுத்து பிடித்த இறால் உள்ளிட்ட மீன்களைத் தரம்பிரித்து பெட்டிகளில் ஐஸ் போட்டு பதப்படுத்தி வைத்துவிட்டு இரவு நித்திரைக்குச் சென்றிருந்தார். மறுநாள் காலையில் எழுந்து மீன்பிடி நடவடிக்கைக்காக தேடிய போது இளைஞர் படகில் இருந்து காணாமற்போயிருந்தார் என்று சக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மறுநாள் மதியம் வரை கடலில் தேடியவர்கள் கரைக்கு வந்து மீனவ இளைஞர் காணாமற்போன விடயத்தை ஏனையவர்களுக்குத் தெரிவித்தனர். அதனையடுத்து அப்பகுதி மீனவர்களின் உதவியுடன் கடலில் தேடியபோதிலும் இதுவரை இளைஞர் தொடர்பில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

கடற்றொழில் சங்கம் மூலம் தொடர்புடைய தரப்பினருக்குத் தகவல் வழங்கப்பட்டு தேடப்பட்டு வருவதாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-100)

## கஞ்சாவுடன்...

அங்கு கடமையிலிருந்த பொலிஸார் இரு இளைஞர்களைச் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட்டபோது ஒருவரிடமிருந்து ஒரு கிராம் உயிர்கொல்லி கஞ்சாவையும் மற்றையவரிடமிருந்து 100 மில்லிகிராம் உயிர் கொல்லி கஞ்சாவையும் கைப்பற்றினர். இதனையடுத்து இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-125)

## பயணிகள்...

இதற்கு இந்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் நிறுத்தப்பட்ட பயணிகள் கப்பல் சேவை 4 தசாப்தங்களாகத் தடைப்பட்டிருந்தது. 4 தசாப்தங்களின் பின்னர் இந்தியா - இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த ஒக்ரோபர் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடகிழக்கு பருவ மழையின் காரணமாக, கப்பல் சேவை ஒக்ரோபர் 20ஆம் திகதியுடன் தற்காலிகமாக நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (அ-ஒ-இ)

## கைக்குழந்தையுடன்...

கைப்பையிலிருந்து 500 யூரோ மற்றும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா, கடவுச்சீட்டு என்பனவும் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக, யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும், கோப்பாய் பொலிஸாரும் இணைந்து சங்கானையைச் சேர்ந்த 22 மற்றும் 28 வயதான சகோதரர்களான ஆணையும் பெண்ணையும் கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். விசாரணைகளின்போது பெண், கைக்குழந்தையுடன் மக்கள் அதிகம் நடமாடும் இடங்களுக்குச் சென்று ஏமாற்றி திருடி வருவதாகத் தெரியவந்துள்ளது. (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமை அறிவொளி

யாழ்ப்பாணம், ஜன. 29

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நாவற்குழியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கனடா-இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ந. கேதீஸ்வரசிவம், செ. கிருஸ்ணகோபால், கு. கல்யாணசுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

இதன்போது மாணவர்களுக்கு கனடா ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பின் அனுசரணையில் சூழல் விழிப்புணர்வு அப்பியாசக் கொப்பிகள் கையளிக்கப்பட்டன. (ச-27)

**வாடகைக்கு**

சேல்ஸ் வாகனம் வாடகைக்கு.
டாட்டா சுப்பர் ஏசி

**077 925 4050**

**சாரதி தேவை**

யாழில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு, Heavy Vehicle சாரதி உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**S.Ravi: 077 200 9196**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம்-கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 129 4999**
**076 788 0591**

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
**0777 554 528**

# NEW SCIENCE HALL
## KANNATHIDDY ROAD, JAFFNA

# 2024 A/L Day Class
## கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
(2023 பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)

**நேரடி வகுப்புக்கள்**
Monday to Friday

| | | |
|---|---|---|
| COM .MATHS | P. செந்தில் நாதன் | 7.00-am |
| | S. சிவகரன் | 5.00-7.00 pm |
| BIOLOGY | V.S. குணசீலன் | 8.00 - 9.30 am |
| CHEMISTRY | V.K. நந்தா | |
| | P. லோகாசனன் | 9.30-11.30 am |
| PHYSICS | G. பிரபா | |
| | R. ராகுலன் | 11.30-1.30 noon |

**நிகழ்நிலை வகுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| COM.MATHS | P. செந்தில் நாதன் | MON TO FRI 7.00 am |
| BIOLOGY | K. இராகவன் | MON TO FRI 8.00 - 9.00 pm |
| PHYSICS | G. பிரபா | MON TO FRI 7.00 - 8.30 pm |
| | R. ராகுலன் | MON TO FRI 12.00 - 1.30 pm |
| CHEMISTRY | S.T. உமாசங்கர் | SAT, SUN & MON 9.00 - 10.15 pm |
| | V.K. நந்தா | MON TO FRI 5.30 - 7.00 am |

சகல மாவட்டங்களில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்

**ஆரம்பம்: 05.02.2024**

தொடர்பு: 076 566 3006, 076 569 3006, 077 791 7611
https:facebook.com new science hall

## மரண அறிவித்தல்

எம்முடன் 06 . 02 . 1958

இறையுடன் 27 . 01 . 2024



### திருமதி அன்னலக்ஸ்மி மகேந்திரா

யாழ்ப்பாணம், உரும்பிராயை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.அன்னலக்ஸ்மி மகேந்திரா அவர்கள் கடந்த (27.01.2024) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான நடராசா வாலாம்பிகை தம்பதிகளின் புதல்வியும், அமரர்களான கனகராசா அம்பிகை தம்பதிகளின் மருமகளும், அமரர் கலாபூஷணம் கனக மகேந்திரா (ஓய்வு நிலை அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்) அவர்களின் மனைவியும், திருமதி உ.ஹம்சானந்தி (ஆசிரியை தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி), திருமதி மெ. நிதர்சனா (வளவாளர், வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை), திரு.ம.மயூரதன் (நிறைவேற்று உத்தியோகத்தர், டோக்கியோ சீமேந்து கம்பனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு.க.உமாசுதன் (மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்- மட்டக்களப்பு), திரு கி.மெக்கீவன் (தீயணைப்பு படைப்பிரிவு - திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி உ. ஆருகஷணி (தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி), செல்வன் உ. ஆதீஸ்வர் (தி/ இ.கி.ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி) ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், அமரர் அன்னபூரணம், திரு.வரதராசா, அமரர் அருளாம்பிகை, திரு.நவராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்று (28.01.2024) திருகோணமலை வில்லூன்றி கந்தசாமி கோவில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதி கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் இடம்பெற்று ந.ப 12.00 மணியளவில் யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் மீண்டும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 29315) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் மலர்வு 25 . 08 . 1949

விண்ணில் மலர்வு 28 . 01 . 2024



### இரத்தினசிங்கம் திலகவதி

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் திலகவதி நேற்று (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான முத்தையா வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சுரேஷ், கஜயராஜ், சிவகுமார், நிமலதாஸ், விஜயலதா, விஜயரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, சண்முகலிங்கம் மகேஸ்வரி, துரைசிங்கம் மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவலிங்கம், பொன்னம்பலம், குணலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், சுந்தராம்பால், கீதவாணி, சத்தியா, கவிதா, பத்மராசன், றுக்சினி ஆகியோரின் மாமியாரும், சயந்தன், சரணியா, பிரகாஷ், விஷ்ணுகா, ஹபிநயன், அபிஷேக், அபிநாஷ், சர்விகா, அபிநயா, தரண்சிகா, சில்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சந்தோஸின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
076 302 3529 / 076 913 6087

வேலணை கிழக்கு,
4 ஆம் வட்டாரம்.

(C53729) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org